செ.வெ.எண்: 561

# செய்தி வெளியீடு – 12.7.2008

## உலக மற்றும் தேசிய வலுதூக்கும் போட்டிகளில் சாதனை புரிந்த தமிழக விளையாட்டு வீரருக்கு 10 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை! முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

* * *

திருவள்ளூர் மாவட்டம் காக்களூரைச் சேர்ந்த திரு.என்.அன்பு, உலக மற்றும் தேசிய அளவிலான வலுதூக்கும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 15 தங்கப் பதக்கங்களையும், 3 வெள்ளிப் பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்று சாதனை படைத்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும் 2007ஆம் ஆண்டு கேரளாவில் நடைபெற்ற தேசிய வலுதூக்கும் போட்டிகளில் சாதனை படைத்து ஒட்டுமொத்த சாம்பியனுக்கான தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

திரு.அன்பு அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பாராட்டி அவரை மேலும் ஊக்குவிக்கும் வண்ணம் அவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (12.7.2008) 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.